★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 13௳ சனி (25—2—56) ★ ★ வெளியூர்: மாசி 14௳ ஞாயிறு (26—2—56) [இதழ் 217

வாக்கெடுப்பு பற்றி அண்ணா

"'தேவிகுளம்—பீர்மேடு வட்டங்கள் தமிழகத்துடனா அல்லது கேரளத்துடனா இணைவது?' என்பது குறித்து அங்கு வாழும் மக்களிடை ஒரு வாக்கெடுப்பு நடத்துவதுதான் நியாயமான தாகும்; அதற்கு நேரு தயாரா? அதைவிட்டு, முன்வைத்த காலை பின்வைக்க மாட்டேன் என்று பிடிவாதம் பேசினால்—'நான் சொல்லிவிட்டேன்; ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்' என்று சர்வாதிகாரம் பேசினால்—பண்டித நேரு அவர்களே! இரத்தக் கறை படிந்த வரலாற்றுச் சுவடிகளைத்தான் உங்களுக்குக் காட்ட முடியும்!" —சென்னை-மண்ணடி கூட்டத்தில் அண்ணா

பிப். 20—பொது வேலைநிறுத்த எதிரொலி:

பழிவாங்கும் 'படலம்' ஆரம்பம்

அடக்குமுறை அம்புகள் பாய்ந்து வருகின்றன

15 கழகத் தோழர்களுக்கு ஒரு மாத சிறைத் தண்டனை

பிப். 20—பொது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தோழர்கள் பல நூறு பேர் கைது செய்யப்பட்டிருப்பதும் எண்ணற்றோர் மீது வழக்குத் தொடரப்பட்டிருப்பதும் குறித்து ஏற்கனவே செய்தி வெளியிட்டிருக்கிறோம்.

பொது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மீது சர்க்கார் வஞ்சம் தீர்த்துக்கொள்ள அடக்குமுறைக் கணைகளை ஏவியவண்ணமுள்ளனர்.

கடந்த பிப். 20-ல், திருமங்கலத்தை அடுத்த வாலாந்தூரில் கைது செய்யப்பட்ட 15 தி. மு. கழகத் தோழர்களுக்கு ஒரு மாத சிறைத் தண்டனை தரப்பட்டிருக்கிறது.

தோழர்கள் தவமணி, பழனிச்சாமி, பாலுச்சாமி, காமணன், தர்மர், பால்சாமி, ஆண்டிதுரை, முாணன், வி. கே. பால்சாமி முதலிய 15 தோழர்கள் 20-ந் தேதி காலை வாலாந்தூர் நகரில் கைது செய்யப்பட்டு பகலில் திருமங்கலம் கொண்டுவரப்பட்டனர்.

திருமங்கலம் 'சப் - மாஜிஸ்திரேட்' வழக்கை விசாரித்துவிட்டு, அந்த 15 தோழர்களுக்கும் ஒரு மாத சிறைத் தண்டனை தந்து அப்போதே தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

மதுரை மத்திய சிறைக்குத் தோழர்கள் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றனர்.

திருமங்கலம் கழகத் தோழர்கள் வாலாந்தூர் தோழர்களைச் சந்தித்து, உரையாடினர்.

வாலாந்தூர் தோழர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் தண்டனை ஏற்று சிறைக்கூடம் புகுந்துள்ளனர்.

★

உளுந்தூர்பேட்டை

இங்கு வேலை நிறுத்தத்திற்கான ஏற்பாடுகளைச் செய்த தி. மு. க. தோழர் கே. கருத்தோவியன் 19—2—56 அன்றே கைது செய்து காவலில் வைக்கப்பட்டார்; என்றாலும், பிப். 20—பொது வேலைநிறுத்தம் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. கடைகள் அடைத்துக்கிடந்தன; நகர் அமைதியில் ஆழ்ந்துகிடந்தது; அர்த்தால் வெற்றி தந்தது.

கடையம்

பிப். 20-ல், தோழர் கே. கலைதாசன் தலைமையில் புறப்பட்டுச் சென்ற 11 தொண்டர்கள் பஸ் நிலையத்தில் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

சர்க்கார் முயற்சிகள் தோற்றுப்போன பரிதாபம்

'கடையை அடையுங்கள்; வேலை நிறுத்தம் செய்யுங்கள்' என்று, மக்களிடத்தில் விளக்கம் தருபவர்களைக் கைது செய்து சிறையில் தள்ளிவிட்டால், பொது வேலைநிறுத்தமும் கடையடைப்பும் நடைபெறாது என்று சர்க்கார் கருதினர் போலும்! பல இடங்களில் அந்த முறையில் பல தோழர்களைக் கைது செய்து பார்த்திருக்கின்றனர் என்றாலும், வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது.

தொழிலாளிக்கு டைரக்டர் பதவி!

இந்தூரிலுள்ள துணி ஆலை ஒன்றில், தொழிலாளர்களின் பிரதிநிதி ஒருவரை 'டைரக்டர்கள் போர்டி'ல் சேர்த்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்.

'ஏதேச்சாதிகாரி'களுக்கு வங்கம் தரும் எச்சரிக்கை

மாநிலமெங்கும் அமைதியான அர்த்தால்: கல்கத்தா நகரம் ஓய்வுபெற்றது

கல்கத்தா, பிப். 24—

ஏதேச்சாதிகாரிகளுக்கு வங்க மக்கள் இன்று நல்ல பாடம் கற்பித்திருக்கின்றனர்.

வங்காளம், இன்று செயலற்றுக் கிடந்தது.

பஸ்கள் ஓடவில்லை; டிராம்கள் நகரவில்லை; தொழிற்சாலைகள் மூடிக்கிடந்தன; சர்க்கார் அலுவலகங்கள் வேலை செய்யவில்லை; மேற்கு வங்கத் தலைநகரான கல்கத்தாவிற்குள் ஒரு இரயிலும் 24-ந் தேதி காலை முதல் இரவு வரை நுழையவில்லை; கல்கத்தாவிலிருந்து இரயில்கள் புறப்படவும் இல்லை.

பாங்கிகள் திறக்கப்படவில்லை; பள்ளிகள், கல்லூரிகள் மூடிக்கிடந்தன; கல்கத்தா நகரம், சோம்பிக் கிடந்திருக்கிறது; துறைமுகத்தில் கப்பல்கள் தூங்கி வழிந்தன; துறைமுகத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்துவிட்டனர்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட சர்க்கார் பஸ்களும், 400-க்கும் மேற்பட்ட டிராம்களும் ஓடவில்லை.

மேற்கு வங்க மொழிவாரி மாநில அமைப்புக் குழுவினரான எல்லா இடதுசாரிக் கட்சிகளின் முன்னணியினர் இந்த வேலை நிறுத்த ஏற்பாட்டைச் செய்தனர்.

அது மட்டுமின்றி, இன்று, சட்டமறுப்பு இயக்கமும் துவக்கப்பட்டிருக்கிறதென்றும், 'மேற்கு வங்க—பீகார் இணைப்புத் திட்டத்தைக் கைவிடுகிறோம்,' என்று திட்டவட்டமாக சர்க்கார் அறிவிக்கும் வரையில், தொடர்ந்து மறியல் போன்ற சட்டமறுப்பு இயக்க ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இன்று கல்கத்தா சட்டசபை முன் மறியல் செய்த 50 தோழர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

மாநிலமெங்கும், பல மாவட்டங்களிலும் ஏராளமானவர் கைதாகியுள்ளனர்.

இதற்கு முன்பாக, நேற்று இரவே போலீசார் கல்கத்தாவில் சுமார் 1200 'விரும்பத்தகாத நடத்தையுடையவர்கள்' என்று சந்தேகிப்போரைக் கைது செய்திருக்கின்றனர்.

55 இலட்சம் மக்கள் தொகையுடைய கல்கத்தா, பொது வேலை நிறுத்தத்தின் மூலம் ஏதேச்சாதிகாரிகளுக்குத் தெளிவான எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

★

பீகாரிலும் எதிர்ப்பு!

பாட்னா, பிப். 24—

இன்று காலையில் பீகார் சட்டசபை முன்பு, மேற்கு வங்கத்துடன் பீகாரை இணைப்பதை எதிர்த்து, 'ஜனதா கட்சி'யைச் சேர்ந்த சுமார் 1,000 தொண்டர்கள் கூடிநின்று இணைப்பு எதிர்ப்பு கோஷங்களை முழக்கி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

அவர்கள் 'நகரத் திடல்' ஒன்றிலிருந்து ஊர்வலமாக வந்து சட்டசபை முன்பு கூடினர். சட்டசபை மாலை முடியும்வரை வாசலிலேயே நின்று ஆர்ப்பாட்டம் செய்துவிட்டு மாலையில் கலைந்து சென்றனர்.

வங்க - பீகார் இணைப்பு மீது நகரசபைத் தேர்தல்

தோல்விநிச்சயம் என்று அரசாங்கத்தின் அச்சம்

தேர்தல் ஓராண்டு காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது

கல்கத்தா, பிப். 23—

வங்காள—பீகார் இணைப்பு முயற்சியை தேர்தல் பிரச்சினையாகக்கொண்டு கல்கத்தா நகரசபை தேர்தலில் போட்டியிடுவது என்று பல நகரசபை உறுப்பினர்களும், சட்டசபை எதிர்க்கட்சியினரும் எண்ணியிருந்தனர்.

மார்ச்சு 29-ந் தேதி நகரசபை தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்ததை, அரசாங்கம் ஒரு வருட காலத்திற்குத் தள்ளிவைத்துவிட்டது.

குறிப்பிட்ட தேதியில் தேர்தலை நடத்த வேண்டுமென்று பல நகரசபை உறுப்பினர்களும், சட்டசபை எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அரசாங்கத்தை வலியுறுத்திவந்தனர்.

சென்ற கிழமையில் நடைபெற்ற இரண்டு நகரசபை துணைத் தேர்தல்களிலும் காங்கிரஸ் அபேட்சகர்கள் தோல்வி உற்றனர்.

மார்ச் 31-ந் தேதியோடு கல்கத்தா நகரசபையின் ஆயுட்காலம் முடிவடைகிறது. மேலும் ஓராண்டு காலத்திற்கு நகரசபையின் ஆயுட்காலத்தை நீடித்துவைத்திருக்கிறது வங்காள அரசாங்கம்.

'இந்தியத் துணிகளை இறக்குமதி செய்யாதே'

இந்தியாவிலிருந்தும், ஹாங்காங்கிலிருந்தும் தீர்வையில்லாததும், குறைந்த விலையுள்ளதுமான துணிகளை இறக்குமதி செய்வதைத் தடைப்படுத்த வேண்டுமென்று பிரிட்டிஷ் துணித்தொழில் முதலாளிகளின் பிரதிநிதிகளும், தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் வர்த்தக அமைச்சரிடம் வற்புறுத்தியுள்ளனராம்.

அமைச்சரின் அதிகார துஷ்பிரயோகம்

தனது புகைப்படத்தை விற்று ஆயிரக்கணக்கில் பணந்திரட்டினார்

விந்திய பிரதேச சட்டசபையில் விவாதம்

ரீவா, பிப். 24—

"தன்னுடைய புகைப் படங்களை கிராம - நகர - மாவட்ட ஆட்சி மன்றங்களில் வைக்க வற்புறுத்தினார்; அதற்காக தன்னுடைய அதிகாரத்திற்குட்பட்ட அரசாங்க அதிகாரிகளின் செல்வாக்கை உபயோகப்படுத்தினார்; தனது புகைப்படங்களை தானே வியாபாரம் செய்து ரூ. 24,000 சம்பாதித்தார்."

இக்குற்றச்சாட்டை, விந்தியப் பிரதேச நிதி அமைச்சர்மீது சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த சிரீனிவாஸ் திவாரி என்பவர் கூறியுள்ளார்.

விந்தியப் பிரதேச சட்டசபையில் மேற்படி குற்றச்சாட்டை எடுத்துக் கூறி, சட்டசபையை ஒத்திவைக்கும்படி சோஷலிஸ்டு உறுப்பினர் ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தார்.

அதை ஏற்க மறுத்து, சட்டசபைத் தலைவர், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் மேற்படி பிரச்சினையைக் கொண்டுவர வேண்டுமென அறிவித்துவிட்டார்.

மோட்டார் தொழிலாளர் வேலை நிலை உயர!

சர்க்கார் சட்டம் கொண்டுவருகிறது

மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் வேலை நிலைகளை அபிவிருத்தி செய்வதற்கென சர்க்கார் சீக்கிரமே ஒரு மசோதா கொண்டுவருவர்.

வேலை நேரம், வாராந்திர விடுமுறை, அதிகநேர வேலைக்கு ஊதியம், ஓய்வு-விடுதி, சேவிக்கை முதலியன சம்பந்தமான ஏற்பாடுகள் மசோதாவில் இருக்கும்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 25-2-'56 சனி

பம்பாயும் - சென்னையும்

இந்தியாவின் தலைவாயில் என்ற பெருமைக்குரிய பெரும்பட்டினம், மராட்டிய மண்டலத்தினின்றும் பிரிக்க முடியாத—பிரிக்கக் கூடாத மாநகர், அங்கு குடியேறிக் கொட்டமடிக்கும் குஜராத்தியரின் நலன்களுக்காக 'மராட்டியருக்கு இல்லை' என்று 'பெரிய மனிதர்'கள் வழங்கிய தீர்ப்பு, மராட்டிய மண்டலத்தில் — குறிப்பாக பம்பாயில் பெரும் தீயை மூட்டிற்று. மிகத் தெளிவான அநீதி கண்ணுக்கெதிரே இழைக்கப்படுவதைக் கண்ட மராட்டியர் கொதித்தெழுந்தனர்; பம்பாய் அல்லோல கல்லோலப்பட்டது — ஒரு கிழமையாகக் கடந்த திங்களில்!

'நாம் இழைப்பதோ பகிரங்கமான அநீதி; அந்த அநீதிக்கு ஆளாகிறவர்களோ வீரம் செறிந்த வரலாற்றைக் கொண்ட பரம்பரையினர்; அநீதி கண்டு அவர்கள் வாளாவிருக்கமாட்டார்கள்; கொதித்தெழுவர்; கோபக் கனல் வீசும் அவர்தம் முகங்களிலே! ஆவேசம் கொண்டவர்களாகி விட்டால் அவர்களை அடக்க, நாம் இழைத்த அநீதியை நிலைநாட்ட, அமுல் செய்ய துப்பாக்கிகளைத் துடைத்து வைக்கவேண்டும்; குண்டுகளைச் சரிபார்த்துக்கொள்ளவேண்டும்; போலீசும், பட்டாளமும் தாக்குதலுக்கு ஒத்திகை பெறவேண்டும்', என்ற 'பெரிய மனிதர்'களின் உத்தரவுக்கு ஒப்ப, பம்பாய் சர்க்கார், தாக்குதலுக்குப் பயிற்சி தந்து தயாராக வைத்திருந்த போலீஸ் பட்டாளம், கொதித்தெழுந்த மராட்டிய வீரர் கூட்டத்தைத் தடிகொண்டு தாக்கி, கைகால்களை ஒடித்தது; புகைக் குண்டு வீசி கண்களை அவித்தது; துப்பாக்கிகளை நீட்டி உயிர்களைக் குடித்தது.

பம்பாய் வீதிகள் பிணக்காடாயின; இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தது; கடைகள் கொள்ளையடிக்கப் பட்டன; போக்குவரத்துச் சாதனங்கள் கொளுத்தப்பட்டன; கலகமும் குழப்பமும் ஓயாது நடைபெற்றுக்கொண்டேயிருந்தன; துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது; எழுபத்தொரு பேர் பிணமாயினர்; எழுநூற்றுக்கும் அதிகமானோர் படுகாயம்பட்டனர்; ஆயிரக்கணக்கானோர் சிறைபிடிக்கப்பட்டனர்.

'பம்பாய் மராட்டியருக்கு இல்லை' என்ற 'பெரிய மனிதர்'கள் செய்த கொடிய—அக்கிரமமான தீர்ப்பின் விளைவுதான் எண்ணற்ற உயிர்ச்சேதமும், ஏராளமான பொருட்சேதமும்!

அந்தப் பம்பாய் நிகழ்ச்சிகளைத்தான், தமிழ் மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகத் திரண்டெழுந்த போது, கனம் காமராசர் சுட்டிக் காட்டி மிரட்டினர்.

'டில்லியின் தீர்ப்பை எதிர்த்தவர்கள் என்ன ஆனார்கள், பார்த்தீர்களா? பார்த்த பிறகுமா—எழுபத்தொரு பிணங்களைக் கண்ட பிறகுமா, பொது வேலைநிறுத்தம் என்று பேசுகிறீர்கள்?' என்று கேட்டார் காமராசர்.

அப்போதே நாம் தெரிவித்தோம்—'சென்னை, சென்னைதான்; பம்பாய் அல்ல' என்று, தெளிவாக!

இந்தியத் துணைக் கண்டத்தில், வடநாடு, தென்னவரின் பண்பாட்டினின்றும் வேறுபட்ட அல்ல — முரண்பட்ட ஒரு பண்பாட்டின் நிகழ்காலத் தலைமுறையினர் வாழும் பகுதியாகும்!

'வடநாடு வேறு — தென்னாடு வேறு' என்ற நிரூபிக்கப்பட்ட உண்மையை எத்தனை 'ஒற்றுமை ஒட்டு'கள் போட்டாலும், மூடி மறைத்தாலும் மறுத்துவிட முடியாது.

மின்சாரத் தாக்குதல்போல, தீய விளைவுகளைக் கொண்ட சம்பவங்கள் தோற்றுவிக்கும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி, ஆவேசங் கொண்ட நிலையில் மேற்கொள்ளும்செயல்கள் எல்லாம் விவேகமானவையும் அல்ல — வீரத்தின்பாற்பட்டவையும் அல்ல என்பதை, பெருமளவு தென்னாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்று பொதுவாகக் கூறப்படுவதில் மிகையேதுமில்லை. தங்களது வாழ்வைப் பாதிக்கிற அளவு மிதமிஞ்சிய பொறுமையில் தென்னாட்டவர் ஆழ்ந்திருக்கின்றனர் என்றாலும்கூடப் பொருந்தும்; ஆனால், வடநாட்டில் நிலை அதுவல்ல! இந்த வேறுபட்ட நிலைகளை உணர மூன்றாவது கண் தேவையில்லை; இருக்கும் இரு கண்களே போதும்—அவை பழுதற்றிருக்குமானால்!

கடந்த எட்டாண்டுக் காலத்தில் இந்தியா முழுமையிலும் நிகழ்ந்துள்ள சம்பவங்களைக் கூர்ந்து கவனிப்போருக்கு இது தெளிவாகப் புலனாகும்.

மேலும், 'பம்பாய் மராட்டியருக்கு இல்லை' என்ற தீர்ப்பில் காணப்படும் அநீதிக்கும், 'தேவிகுளம் - பீர்மேடு தமிழ்ப் பகுதிகள் தமிழர்களுக்கு இல்லை' என்ற தீர்ப்பில் உள்ள அநீதிக்கும் நிச்சயம் வேறுபாடு உண்டு—அளவிலும், தரத்திலும்!

மேலும், 'பம்பாய் மராட்டியருக்கு இல்லை' என்ற தீர்ப்பு வழங்கப்படுமுன்னரே மராட்டியர் அனைவரும் குமுறப் போகும் எரிமலையாக இருந்தனர்; ஆனால், தமிழக மக்களில் பெரும்பாலோர், 'தேவிகுளம்-பீர்மேடு தமிழருக்கு இல்லை' என்ற தீர்ப்பிற்குப் பிறகுதான்—அநீதியின் உருவம் கண்ணெதிரே காட்சிதந்த பின்னர்தான் நிலைமையைத் தெளிவாகப் புரிந்துகொள்ளும் வாய்ப்புப் பெற்றனர்.

இதுபோன்ற காரணங்களால்தான், 'சென்னை, சென்னைதான்—பம்பாய் அல்ல' என்று முன்பே கூறினோம்.

நாம் தெரிவித்தபடி, 'சென்னை சென்னைதான்' என்பதைக் குறிப்பாக சென்னை மக்களும், பொதுவாகத் தமிழக மக்களும் 'கடந்த பிப். 20—பொது வேலைநிறுத்தத்தின்போது அமைதியாக, பண்பு கெடாமல், பலாத்காரம் தலைகாட்டாமல், வெற்றிகரமாக—ஆனால், வெறி உணர்ச்சி தலைகாட்டாமல் நடந்துகொண்டு, தென்னகத்தின் நற்பெயரைக் காப்பாற்றித் தந்தமைக்கு அவர்களை நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

ஊழல்! எங்கும் எதிலும் ஊழல்!

தற்காப்பு இலாகா தாலாட்டி வளர்க்கிறது!

ஆண்டுதோறும் பல கோடி ரூபாய்கள் பாழாகும் சோகக் கதை

ஊழல்! ஊழல்! எங்கும் எதிலும் ஊழல்! சர்க்காரின் நிர்வாகத் துறைகள் அனைத்திலும், ஊழல் ஊடுருவி நிற்கிறது. இலாகாவாரியாக ஊழல்கள் பிரித்து ஆராயப்பட வேண்டி வருகின்றது.

டெல்லி சர்க்கார் நடத்திய வர்த்தக பேரங்கள், திட்டமிட்டு நிறைவேற்றிவரும் அபிவிருத்தித் திட்டங்கள் இவை அனைத்திலும் ஊழல்கள் மலிந்திருக்கின்றன என்பது மட்டுமன்றி நாளுக்குநாள் அவை வளர்ந்துகொண்டே செல்கின்றன.

ஓராண்டில் கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஊழல்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்ட பின்னும், மறு ஆண்டில்— அதற்கடுத்த ஆண்டில் என்று, ஆண்டுதோறும் கணக்குப் பரிசீலனையின்போது ஊழல் நாற்றமடிப்பதாகவே செய்திகள் வந்தவண்ணமுள்ளன.

'ஊழலின் ஊற்றுக்கால் கண்டுபிடிக்கப்பட வேண்டும்; ஊழலுக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்' என்ற அக்கரை இருந்ததாகத் தெரியக்காணோம்.

ஊழல்களுக்குப் பெயர் போன இலாகாவாக, டெல்லி சர்க்காரின் தற்காப்பு இலாகா இருந்து வருகிறது.

ஆண்டுதோறும் இந்த இலாகாவில் தணிக்கை அதிகாரிகளால் ஊழல்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன; மக்கள் சபையில் விவாதம் நடக்கிறது; மந்திரிகளும் உறுதியளிக்கின்றனர்—'இனி இப்படி நடவாது' என்று! ஆனாலும், தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதை இந்த ஆண்டு வெளிவந்துள்ள தணிக்கைக் குழு அறிக்கை தெரிவிக்கிறது.

1953-54-ம் ஆண்டிற்கான கணக்குகள் 1955-ம் ஆண்டில் பரிசீலிக்கப்பட்டு, இப்போது வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தற்காப்பு இலாகா ஊழல்கள் மீண்டும் நாற்றமடிக்கின்றன என்பதைக் காண முடிகிறது.

கோடிக்கணக்கான ரூபாய் கோட்டை விடப்பட்டிருக்கிறது—பாழாகி யிருக்கிறது; அத்தனையும் இந்த நாட்டு 'மன்னர்'களின் வியர்வைத் துளிகள்!

'இந்தியாவின் புகழ் ஓங்குகிறது' என்று பேசுவோர் இந்த ஊழல் நாற்றத்தையும் சற்று முகர்ந்து பார்க்க வேண்டும்.

ஏற்கனவே தேவைக்கு அதிகமாக இருப்பது போதாது என, ஒரு கோடி ரூபாய்க்கு மோட்டார் வண்டிகள் வாங்கினராம், தற்காப்பு இலாகாவினர்!

எந்தவகையான சாமான்கள் தேவை என்பதை நிர்ணயித்துக் கொள்ளாமலேயே ரூ. 25 இலட்சம் பெறுமான சாமான்கள் வாங்கினராம்; அவை எந்தவித உபயோகத்திற்குமே பயனின்றித் தூங்குகின்றனவாம்!

தேவை எவ்வளவு இருப்பது என்று தெரிந்து கொள்வதில் தவறு செய்ததின் விளைவாக இலட்சக்கணக்கான ரூபாய்க்குச் சாமான்களை வாங்கி 'ஸ்டோர்' செய்திருக்கின்றனர்.

ஒரு இராணுவ முகாமில், 1952 செப்டம்பர் திங்களில் 7 இலட்சம் ரூபாய் செலவில் பெட்ரோல் சேமிப்பிற்காக, 16 'டாங்கு'கள் கட்டினராம்; இவற்றில் 12 'டாங்கு'களை உபயோகப்படுத்தவே இல்லையாம்! எஞ்சிய நான்கும் பழுதுடையனவாக இருப்பது உபயோகத்திற்குப் பிறகு காணப்பட்டதாம்! ஏழு இலட்சம் ரூபாயும் இப்போது பாழ்!

மற்றும் சில உபகரணங்கள் வாங்கியதிலும், சில தொழிற்சாலைக்கான சாமான்கள் வாங்கியதிலும் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பாழடிக்கப்பட்டிருக்கிறது.

ஊழல்கள் — பல்வகையான ஊழல்கள், டெல்லியின் நிர்வாகத்திறக் குறைவினால், பொது மக்களின் வரிப்பணத்தில் கோடிக் கணக்கான தொகையை ஆண்டுதோறும் கொள்ளைகொண்டு விடுகின்றன!

நிர்வாக இலட்சணம்!

புதுடில்லி, பிப் 22—

11 விமானப் படை அதிகாரிகளுக்கு ஒரே பிரயாணத்திற்கு இரட்டிப்பு பிரயாண 'அலவன்ஸ்' தரப்பட்டிருப்பதாக பாதுகாப்பு இலாகா செலவு பற்றிய 'ஆடிட் ரிபோர்ட்'டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தாங்கள் பிரயாண 'அலவன்ஸ்' வாங்கிக்கொள்ளவில்லை என்று விமானப் படை அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்.

ஒரு அதிகாரி ஒரே நாளைக்கு ஒரே பிரயாணத்திற்கு இரண்டு முறை 'அலவன்ஸ்' கேட்டிருக்கிறார்.

இரண்டு உலுவலக அதிகாரிகளுக்கு ஒரே நாளைக்கு ஒரே பிரயாணத்திற்கு இரண்டு தடவை 'அலவன்ஸ்' பணம் தரப்பட்டிருக்கிறது.

மற்றொரு அதிகாரி இருமுறை இருமடங்கு 'அலவன்ஸ்' பணம் கேட்டிருக்கிறார்.

முன்னேறுகின்றனர்?

நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கெடுத்துக்கொள்ளும் ஏற்பாடு அனுபவத்தில் இருந்துவரும் வெளிநாடுகளுக்கு, நிலைமையை ஆராய்ந்துவருவதற்காக, ரயில்வே தொழிலாளர்களின் பிரதிநிதிகள் உட்பட்ட கோஷ்டியொன்றை அனுப்புவது பற்றி இரயில்வே மந்திராலயம் ஆலோசனை செய்து வருகிறதாம்!

துணைத் தலைவர் கிடையாதாம்!

பாகிஸ்தானின் வருங்கால, இஸ்லாமியக் குடியரசுக்கு துணைத் தலைவர் கிடையாதென்றும், முஸ்லீம்தான் அதன் குடியரசுத் தலைவராக இருக்கவேண்டுமென்றும், பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை முடிவு செய்தது.

ரஷ்யாவின் மாறிவரும் கொள்கை

'வரவேற்கத்தக்கது' என்கிறார் நேரு

புதுடில்லி, பிப். 23—

ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சி மாநாடு, அண்மையில், 'ஸ்டாலின் கொள்கையில் பிடிவாதமாக ஒட்டிக் கொண்டிருக்கக் கூடாது' என்று பொருள்படும் வகையில் தீர்மானம் செய்திருப்பது ரஷ்யாவில் பெரும் மாறுதல்கள் நிகழ்ந்து வருவதையே காட்டுகின்றனவென்றும், இந்த மாறுதல்களின் நோக்கம் சுமூகமான நிலைகளை ஏற்படுத்துவதாக இருக்கின்றனவென்றும் ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சி முடிவு வரவேற்கத் தக்கது என்றும் பிரதமர் நேரு, மக்கள் சபையில், குடியரசுத் தலைவரின் உரை மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

நெய்வேலித் திட்டம்

டில்லியின் அசமந்தம்

புதுடில்லி, பிப். 23—

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கப் பிரதேசங்களில், மேற்கொள்ளப்படவிருக்கும் தண்ணீர் இறைப்புப் பரிசோதனைகளின் பலன்கள் தெரிவதற்கிடையில், சுரங்க வேலைகளுக்காகவும், நகர அமைப்புக்காகவும் சில 'ஆர்ஜித' நடவடிக்கைகளுக்காக இப்போதுதான் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்றும், தண்ணீர் இறைப்புப் பரிசோதனை வேலைகள் இந்த மாத இறுதி வாக்கில் ஆரம்பமாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறதென்றும், அவை 100 நாட்களுக்கு நடைபெற்று வருமென்றும், மத்திய உதவி உற்பத்தி மந்திரி சதீஷ் சந்திரா மக்கள் சபையில் தெரிவித்தார்.

இரண்டாவது திட்டத்தில் மின்சார வசதி

புதுடில்லி, பிப் 22—

இரண்டாவது திட்ட காலத்தில் உற்பத்தி இரு மடங்காகுமாம்; உபரியாக 7,500 சிறு நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் வசதி அளிக்கப்படுமாம் 42 மின்சார உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்படுமாம்.

முதல் திட்ட இறுதியில் 20,000 நபருக்கு மேலுள்ள எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி ஏற்பட்டிருக்குமாம்.

வாக்கெடுப்பு சாத்தியமே என்கிறார் நேரு

கிராமங்களிலும் பொங்கி வழிந்த ஆர்வம்

பிப்ரவரி 20 — அர்த்தால்: அறுவடையும் இல்லை

தமிழகம் கண்டறியாத பொது வேலைநிறுத்தம், கடையடைப்பு கடந்த பிப். 20-ல் நடைபெற்றது. வரலாற்றுச் சிறப்புக்குரிய அந்த மகத்தான சம்பவம், தமிழகத்தின் பட்டிதொட்டிகளில் எல்லாம் நடைபெற்றுள்ள விபரங்கள் நமக்குக் கிடைத்தவண்ணமுள்ளன; அவற்றினை முடிந்தவரையில் சுருக்கித் தந்து வருகிறோம்.

சிறு சிறு கிராமங்களில்கூட விவசாயிகள் எல்லாம் வேலைக்குச் செல்லாதிருந்திருக்கின்றனர்; அறுவடைகூட அன்று பல ஊர்களில் நடைபெறவில்லை.

பொங்கிவழிந்த ஆர்வத்தோடு, பிப். 20—பொது வேலை நிறுத்தம் நடைபெற்றிருப்பதை இந்த நிகழ்ச்சிச் சுருக்கங்கள் சொல்லுகின்றன.

கணியூர்

பொதுவேலை நிறுத்தம் அமைதியாக நடைபெற்றது வியாபார இடங்களும், மில்களும் மூடப்பட்டிருந்தன.

உயர்நிலைப் பள்ளியிலும், மற்றைய பள்ளிகளிலும் போலீஸ் காவலுடன் வகுப்புகள் நடைபெற்றன; என்றாலும், நான்கில் ஒரு பங்கு மாணவர்களே பள்ளிக்குச் சென்றிருக்கின்றனர். போலீஸ் பாதுகாப்புடன் பஸ்கள் சென்றன. 'டூரிங்' சினிமா நடைபெறவில்லை

சர்வ கட்சித் தலைவர் எம். வேலுசாமிக் கவுண்டர் உள்பட 53 தோழர்கள் கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். 20-ந் தேதி மாலை பொதுமக்களிடை உறுதிமொழி படிக்கப்பட்டு ஏற்கப்பட்டது.

மறுநாள் காலை, அருகிலுள்ள உடுமலைக்கு; கைது செய்யப்பட்ட 53 தோழர்களும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

நாகபட்டினம்

இங்கு அர்த்தால் முழு அளவில் அமைதியாக நடைபெற்றது அன்று காலை 6 மணியிலிருந்தே சர்வ கட்சி கூட்டணியினர் நகரின் எல்லாப் பகுதிகளிலும் சுற்றி வலம் வந்துகொண்டேயிருந்தனர் போலீஸ் சட்டப்படி தடையுத்தரவு பிறப்பித்திருந்தனர்.

அன்று மாலை 5 மணிக்கு நாகை இரயில்வே நிலையத்திலிருந்து எல்லாத் துறை மக்களும் கொண்ட ஓர் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு அவுரித் திடலை அடைந்தது. அங்கு, தோழர் என். சிவராஜ் எம். எல். எ. தலைமையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசிய பின் உறுதி மொழி மேற்கொள்ளப்பட்டது.

ஒரு சில போலீசார், கடைக்காரர்களிடம், 'கடையைத் திறந்து வையுங்கள்—நாங்கள் பாதுகாப்புத் தருகின்றோம்' என்று கூறியும், நகரில் முழு அளவில் அர்த்தால் நடைபெற்றது.

கடலங்குடி

வியாபாரிகள் கடையடைப்புச் செய்தனர். மாணவர்களைப் பள்ளி ஆசிரியர்களும், பஞ்சாயத்துபோர்டு தலைவரும் மிரட்டியும்கூட மாணவர்கள் பள்ளிக்குச் செல்ல மறுத்தனர் தோழர் கே. ஆர். பாலகிருட்டிணன் தலைமையில் தோழர்கள் பி. இரங்கநாதன், பி. குருநாதன், ச. கலைதாஸ், கே. ஆர் சம்பந்தம் ஆகிய தோழர்கள் கலந்துகொண்டு அர்த்தாலை வெற்றிகரமாக நடத்தினர்.

திருநள்ளாறு

இவ்வூரிலுள்ள கடைகளில், தி. க. - வினரின் இரண்டு கடைகளைத் தவிர ஓட்டல்கள் உட்பட எல்லாக் கடைகளும் மூடப்பட்டன. எவ்விதக் கலவரமுமின்றி அர்த்தால் நடைபெறுவதற்குத் தி மு கழகத் தோழர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டனர்.

விழுப்புரம்

விழுப்புரம் நகரமே கண்டிராத அளவில் கடையடைப்பு செய்யப்பட்டது. காங்கிரஸ்காரர்களின் எதிர்ப்பையும், 'கடையடைப்பு கூடாது' என வெளியிடப்பட்ட துண்டு அறிக்கைகளையும், வேண்டுகோளினையும் புறக்கணித்து வணிக நிலையங்களும், காய்கறி—இறைச்சி மார்க்கெட்டுகளும் செயலற்று நகரமே அமைதியாகக் காணப்பட்டது.

காலை 9 மணிக்கு விழுப்புரம் பாண்டி ரோடிலுள்ள புதுச்சத்திரத்திலிருந்து சர்வகட்சியினர் அடங்கிய ஓர் மாபெரும் ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று புறப்பட்ட இடத்தில் வந்து முடிந்தது. அங்கு, உறுதிமொழி வாசிக்கப்பட்டு மக்கள் அனைவரும் மேற்கொண்டனர்.

கண்ணமங்கலம்

தி. மு. கழகத் தோழர்களும், பீடித் தொழிலாளர்களும் காலை 6 மணியிலிருந்து ஊர்வலமாகச் சென்று, கடை அடைப்பு, பாடசாலைகள் அடைப்பு இவைகளை அமைதியான முறையில் செய்து முடித்தனர் அன்று மாலை கழகத் தோழர்களையும் பீடித்தொழில் தோழர்களையும் போலீசார் கைது செய்தனர்.

குளித்தலை

பொது வேலைநிறுத்தம் குறித்து பணியாற்றிவந்த தோழர்களான ஆர். கோவிந்தன், ஆர். கருப்பையா, ஜி. சக்திவேல், ஆர் சுந்தரராசன், மா. சுந்தரம் ஆகியோரை 19-ந் தேதி இரவு 11 மணிக்கு திடீரென்று போலீசார் கைது செய்து 'ரிமாண்ட்' செய்தனர்.

20-ந் தேதி காலை 5-½ மணிக்கு, தி. மு. கழகத் தோழர்கள் பா. கணபதி, தி. வீ முத்துகிருஷ்ணன் ஆகியோர் அவர்கள் வீட்டிலேயே கைது செய்து ரிமாண்டில் வைக்கப்பட்டனர் அன்று மாலை 4 மணிக்கு, குளித்தலை சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தோழர்களை ஆஜர் செய்து விடுதலை செய்தார்கள்.

மாலை 5 மணி அளவில் குளித்தலை வ. உ. சி. சதுக்கத்திலிருந்து ஓர் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதி வழியே சென்று மீண்டும் 6 மணிக்கு அங்கு வந்து சேர்ந்தது திருச்சி மாவட்ட காங்கிரஸ் கமிட்டி உறுப்பினரும், ஊராட்சி மன்றத் தலைவருமான திரு. கே ஆர். வையாபுரி சோழகர் தலைமையில் கூட்டம் நடைபெற்றபோது, உறுதி மொழி வாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. பலர் பேசினர்.

மூலனூர்

பொதுவேலை நிறுத்தம், கடையடைப்பு நடைபெற்றது. தோழர் எ. எஸ். சோமு உட்பட 7 தொண்டர்களை (தி. மு. க) போலீசார் கைது செய்தனர்; வழக்கு 2—3—56ல் தாராபுரம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நடைபெறும்.

ஆவடி

சோஷலிஸ்டு கட்சி, தி. மு கழகம், கிராமாலக் கமிட்டி தொண்டர்கள் பெருமுயற்சியால் கடைகள் அடைப்பும், சினிமா கொட்டகை, எரு டிப்போவும், மாட்டுவண்டி, பஸ், குதிரைவண்டிகள் போக்கு-வரத்துகளும் நிறுத்தப்பட்டது; அர்த்தால் அமைதியான முறையில் நடைபெற்றது.

கடம்பத்தூர்

கடம்பத்தூர் தி. மு. கழகத்தார் காலை 8 மணிக்கு ஊர்வலமும், கடையடைப்பும் மிக அமைதியாக நடத்தினர். பொது மக்கள் தக்க ஆதரவு தந்தனர்.

திருமணி

வடாற்காடு மாவட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் ஆ. குப்புசாமி தலைமையில் கடையடைப்பு வெற்றிகரமாக நடைபெற்றது.

இராசிபுரம்

19—2—56 இரவு கைதான 12 தோழர்களை 21—2—56 மாலை 5 மணிக்கு விடுதலை செய்தனர். விடுதலையான தோழர்களை சேலம் மாவட்டச் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்திரம், பி. சின்னண்ணன், பட்டணம் கிளை தி மு க. செயலாளர் ஆகியோர் வரவேற்றனர். 20—2—56 மாலை 6 மணிக்கு, கட்டனச்சம்பட்டி கிளை தி. மு க. செயலாளர் என். வி. சகாயம் தலைமையில் உறுதி மொழி எடுத்துக்கொண்டனர். ஊர்வலம் நடத்த அனுமதி கிடைத்திருந்தும் போலீசார் அனுமதிக் கொடுக்க மறுத்துவிட்டனர். பெரும்பாலான பஸ்கள் ஓடவில்லை; 90 சதவிகிதக் கடைகள் மூடப்பட்டன. பொதுவாக இராசை நகரம் அதன் சுற்றுப்புறங்களில் பொது வேலைநிறுத்தம், கடையடைப்பு வெற்றிகரமாக நடைபெற்றது. காங்கிரஸ்காரர்களின் முயற்சி படுதோல்வி அடைந்தது.

இரட்டணை

மளிகை, ஜவுளி, ஓட்டல், மற்றும் எல்லாக் கடைகளும் மூடப்பட்டு பலாத்கார நிகழ்ச்சிகள் எதுமின்றி அமைதியாக அர்த்தால் நடைபெற்றது.

வெள்ளனூர்

முழு வேலை நிறுத்தம் நடைபெற்றது. இவ்வூரில் சுமார் 300 கைத்தறிகள் உள்ளன; அவை அனைத்தும் அன்று வேலை நிறுத்தம் செய்தன. மற்றும், ஆலைத் தொழிலாளர்கள் விவசாயத் தொழிலாளர்கள், சிற்றுண்டிச் சாலைகள், நெசவாளர் கூட்டுறவு சொசைட்டி, மளிகை, சில்லரை கடைகள், பள்ளி-உயர்நிலைப்பள்ளி மாணவ-மாணவிகள் அனைவரும் மற்றும் உள்ள எல்லாப் பொது மக்களும் அர்த்தாலில் பங்கேற்றனர்.

தேவரப்பன்பட்டி

19-ந் தேதி இரவே, 20-ந் தேதி பொது வேலைநிறுத்த ஏற்பாடுகளைக் கவனித்துவந்த தி. மு. க தோழர்கள் மூவர் கைது செய்யப்பட்டும்கூட, ஊரில் கடையடைப்பு முதலியன வெற்றிகரமாக நடைபெற்றன. 20-ந் தேதியன்று மேலும் 11 தோழர்கள் கைதாயினர். ஊர்வலத்தினர் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

புதுக்கோட்டை (நெல்லை மாவட்டம்)

காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரை கடைகள் மூடப்பட்டும் லாரிகள் ஓடாமலும், லாரித்தொழிலாளர்கள் வேலை செய்யாமலும், அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது.

குடியேற்றம்

இங்கு அர்த்தால் முழு அளவில் நடைபெற்றது. பொதுவேலை நிறுத்தத்தின்போது கைது செய்யப்பட்ட இரண்டு தோழர்களை மறுநாளே விடுதலை செய்தார்கள்; மற்றும் 5 தோழர்களை விடுதலை செய்ய மறுத்து, அவர்களை வேலூர் சிறைக்குக்கொண்டு சென்றனர்.

புதுக்கோட்டை (திருச்சி மாவட்டம்)

இ. பி. கோ. 51-வது பிரிவின்படி தோழர்கள் எச். தங்கசாமி, டி. சுந்தரம், கே. ஞானமுத்து ஆகிய தி. மு. கழக உறுப்பினர்களும், சுயேச்சை நகர சபை உறுப்பினர் தி. சி. பொன்னன் ஆகிய நால்வரும் 19-ந் தேதி இரவே அவரவர்கள் இல்லங்களிலிருந்து முன்னேற்பாடாக அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

20-ந் தேதி காலை டவுன் திருக்கோகர்ணத்தில் கடைகளை மூடும்படி அமைதியான முறையில் கேட்டுக் கொண்ட தி. மு. கழகத் தோழர்கள் டி. பி. கிருட்டிணன். சகுந்தலா கேசன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர்.

தோழர்கள் அறுவரும் பிப். 20 மாலை டவுன் மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை 4 நாள் ரிமாண்ட் செய்யும்படி மாஜிஸ்திரேட் உத்திரவிட்டார்; ஆனால் மறுநாள் 21-ந் தேதி மாலை 4 மணிக்கெல்லாம் அவர்கள் அறுவரும் விடுதலை செய்யப்பட்டார்கள். தோழர்கள் பலர், அவர்களை மாலையிட்டு வரவேற்றனர்.

வேலை நிறுத்தம், ஊர்வலங்கள் வெற்றிகரமாக முடிந்தன. ஊர்வலத்தில் சுமார் 1000 பேர்களுக்கு மேல் கலந்துகொண்டனர். எந்த விதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை.

வேலூர்

வேலூரின் சரித்திரத்திலேயே நடந்திராவண்ணம், நகரிலுள்ள எல்லாக் கடைகளும் அடைபட்டுக் கிடந்தன. தொழிலலுவலகங்களுக்கு விடுமுறை விடப்பட்டது. ஒரு பஸ்கூட நகரவில்லை. பள்ளிகளெல்லாம் மூடப்பட்டுக்கிடந்தன. காலை 9 மணிக்கு ஆயிரக்கணக்கான மக்கள் கொண்ட ஊர்வலம் புறப்பட்டு, நகரின் முக்கிய வீதிகளிலே வந்து 'பாரக்ஸ்'மைதானத்தை அடைந்ததும், உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டபின் கலைந்தது.

மாலை 3 மணிக்கு மேல் அதிகாரிகளால் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் பின்னர், 22-ந் தேதியன்று 5 நகர சபை உறுப்பினர்கள், பொதுவேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டதற்காக கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

தோழர்கள் லட்சுமிபதி, பெரியசாமி, சீனிவாசன் ஆகியோர் அன்று பகல் சுமார் 12-30 மணிக்கு கைது செய்யப்பட்டார்கள்.

தோழர் வி. எம். தேவராஜ் (தி. மு. க) நகரசபை கூட்டத்திற்கு வரும் வழியில் கைது செய்யப்பட்டார்.

நகரசபைக் கூட்டம் முடிந்து வெளியே வந்தவுடன் தோழர் வி வி. மாணிக்கம் கைது செய்யப்பட்டார்.

செங்கம்

இங்கு கடையடைப்பும், அன்று மாலை ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது. கூட்டத்திற்கு சர்வ கட்சித்தலைவர் தோழர் சப்புராயன் (கம்.) தலைமை வகித்தார். தோழர்கள் து. கண்ணன் (தி. மு. க.), இஸ்மாயில் (கம்), ஆர். ராமசாமி பேசினர். உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டது.

மாநில மாநாட்டு நிதி

தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாடு நிதிக்கு, அண்ணாமலை நகர் திராவிட முன்னேற்றக் கழக மாநில மாணவர் கிளையின் சார்பில், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராஜன் அவர்கள் மூலம் ரூ. 200 தரப்பட்டது—பெற்றுக் கொண்டோம் — பொருளாளர்.

சீர்காழி

கடையடைப்பும், பொதுவேலை நிறுத்தமும் வெற்றிகரமாக நடைபெற்றது. சீர்காழி, வைத்தீசுவரன் கோவில், திருவெண்காடு, கொள்ளிடம், வள்ளுவக்குடி மற்றும் கிராமப்புறத்திலுள்ள எல்லாக் கடைகளை மூடியும், நெல், அரிசி மில்கள் வேலைகளை நிறுத்தியும் அர்த்தாலை அமைதியாக நடத்தினர்.

அன்று மாலை சீர்காழி புகைவண்டி நிலயத்திலிருந்து விவசாயிகளும், பொதுமக்களும் கொண்ட ஊர்வலம் புறப்பட்டு, பொதுக் கூட்டத்தை அடைந்தது. பொதுக் கூட்டத்தில் பல தோழர்கள்பேசிய பின், உறுதிமொழி வாசிக்கப்பட்டு, மக்கள் மேற்கொண்டனர்.

சத்திரப்பட்டி

இங்கு பொதுவேலை நிறுத்தம் வெற்றிகரமாகவும், அமைதியாகவும் நடைபெற்றது இங்கு உள்ள 13 கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன; விவசாயிகள் கதிர் அறுவடையை நிறுத்திவிட்டனர்; கூலி வேலை செய்பவர்களும் கதிர் அறுக்கப் போகாமல் நின்றுவிட்டனர்; ஒரு விவசாயி வேலை நடத்த முயன்றும் தொண்டர்களின் மறியலால் தோல்வி அடைந்தார்.

7 வயது சிறுவர் - சிறுமி முதல் 70 வயது முதியோர் வரை சுமார் 200 பேர் அணிவகுத்து சத்திரப்பட்டியிலிருந்து புறப்பட்டு பக்கத்துக் கிராமங்களாகிய காஞ்சரம் பேட்டை, சின்னப்பட்டி, சோலை, மலையன்பட்டி, வெளிச்சநத்தம் முதலிய கிராமங்களுக்கு ஊர்வலமாகச் சென்று, திரும்பி சத்திரப்பட்டிக்கு வந்து சேர்ந்தனர். பின் ஐயனார் கோவில் முன்பாகக் கூட்டம் கூடி தோழர் கோபாலகிருட்டிணன் உறுதி மொழி வாசித்து முடிந்தவுடன் கூட்டம் கலைந்தது.

இவ்வூர் சரித்திரத்திலே இதுவே முதல் பொதுவேலை நிறுத்தம்.

வந்தவாசி

எல்லாக் கடைகளும், உணவுச் சாலைகளும் மூடப்பட்டன; சுமார் 60 பஸ்களும், 10 லாரிகளும் வேலை நிறுத்தம் செய்தன. 400 - உயர்நிலைப் பள்ளியின் மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை. அன்று இரவு இரண்டுச் சினிமா கொட்டகைகளும் அர்த்தாலை மேற்கொண்டன. அமைதியான முறையில் பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றது; காங்கிரஸ் தோழர்களும் அர்த்தாலில் கலந்துகொண்டனர்.

தோழர் வி. டி. அண்ணாமலையின் தலைமையில் ஊர்வலம் நடைபெற்ற பின் கூடிய கூட்டத்தில், மக்கள் உறுதி மொழியை ஏற்றனர்.

வாளவனூர்

சர்வ கட்சி கூட்டணியின் சார்பில், பொது வேலைநிறுத்தம் அமைதியாக நடைபெற்றது. உயர்தரப் பள்ளி மாணவர்கள் 80 சதவிகிதம் பேர் பள்ளிக்குச் செல்லவில்லை.

படப்பை

தி. மு. கழகமும், வள்ளுவர் மன்றமும் கூட்டணி அமைத்து, கடையடைப்பும், வேலை நிறுத்தமும் அமைதியாக நடைபெறுமாறு ஆவன செய்தனர்.

வலியுறுத்துமா சென்னை அரசாங்கம்?

கடையடைப்பு கூடாதெனக் கூறிய காங்கிரஸ்காரர் தன் கடைகளையே மூடிக்கொண்டார்

சங்கரன்கோவிலில் நிகழ்ச்சி

சங்கரநயினர் கோவிலில் பிப். 20-ல், தோஞ்சலி நூல் ஆலை திறக்கப்படவில்லை. சாயத் தொழிற்சாலைகள், நெசவுத் தொழில் ஆலைகள், கோமதி ஜின்னிங் பாக்டரி, மற்றும் தொழில்கள் எல்லாம் மூடப்பட்டன. நெசவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் கட்டுப்பாடாக கலந்து கொண்டனர்; கடைகள் அடைக்கப்பட்டுக் கிடந்தன; அமைதியாக, பலாத்காரச் செயல்களுக்குச் சிறிதும் இடமின்றி அர்த்தால் சிறப்பாக நடைபெற்றது.

மாலை 4 மணிக்கு தி. மு. கழகச் செயலாளர் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம், தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த தோழர் சா. கருப்பையா முதலியோர் தலைமையில் 2,000 மக்கள் அடங்கிய ஓர் மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது; நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று காந்தி திடலில் முடிந்ததும் கூடியிருந்த மக்கள் அனைவரும் கூட்டணியின் உறுதிமொழியை மேற்கொண்டனர்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பொதுவேலை நிறுத்தம் வேண்டாமெனப் பிரச்சாரம் செய்தும் தோல்வி கண்டனர். முடிவில் 20-ந் தேதியன்று, காங்கிரஸ் தலைவர் ஒருவருக்குச் சொந்தமான மூன்று கடைகளும் மூடிக்கிடந்தன.

4,000 தறிகள் வேலை செய்யவில்லை

பொதட்டூர் பேட்டையில் பொது வேலைநிறுத்த நிகழ்ச்சிகள்

ஆந்திர மாநில எல்லைக்குள் இருக்கும் தமிழ் வட்டங்களுள் ஒன்றான பொதட்டூர் பேட்டையில் பிப். 20—பொது வேலை நிறுத்தம் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது.

ஊரில் மிகப் பிரபலமான தொழிலான கைத்தறி நெசவில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் பொது வேலைநிறுத்தத்திற்குப் பேராதரவு காட்டியிருக்கின்றனர்.

4,000 நெசவுத் தறிகள் அன்று வேலை செய்யவில்லை; தினமும் ஓயாது ஓசை எழுப்பும் அவை, அன்று ஓய்வு பெற்றன—உறங்கின நெசவாளர்கள் பாவு தோயும் தொழிலைக்கூடச் செய்யவில்லை.

விவசாயிகள்—வழக்கமாக தினக் கூலிக்குச் செல்பவர்கள்—அன்றைய தினம் செல்லவில்லை.

சிறிய பெரிய கடைகள், உணவு விடுதிகள் எல்லாம் மூடிக்கிடந்தன.

அன்று காலை 7-30 மணிக்கு ஊராண்மைக் கழகத் தலைவரும் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவரும் கூட்டணித் தலைவருமான என். கே. எஸ். கணேசன் தலைமையில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட மாபெரும் ஊர்வலம் நகரவீதிகள் வழியாகச் சென்று, உறுதிமொழி மேற்கொண்டனர்.

வெகு அமைதியாக நடைபெற்ற பொது வேலைநிறுத்தம் முழு வெற்றி பெற்றது.

ஆசைதானும்—ஆனால் !

"பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பழைய பிரயாணச் சலுகைகள் எல்லாவற்றையும் மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று எங்களுக்கு எவ்வளவோ ஆசைதான்; ஆனால் மக்கள் நெருக்கம் இன்னமும் அதிகமாகத்தான் இருந்துவருகிறதென்பதை நான் மறந்துவிட முடியாது," என்று இரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரி மக்கள் சபையில் அறிவித்துள்ளார்.

சென்னை, பிப். 22—

அண்மையில் இராமநாதபுர மாவட்டத்தில் புயலாலும், புனலாலும் பாதிக்கப்பட்ட பகுதிகள் சிலவற்றை தேசிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கொண்டுவந்து புனர்வாழ்வளிக்க மாநில அரசினர் தீர்மானித்துள்ளனராம்.

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

பிப். 26 : சோழவந்தான்
27 : மதுரை
28 : திருமயம்

மாதவரம் பிர்க்கா தி. மு. க. பிரச்சாரக் குழு

26—2—56 பிற்பகல் 2 மணிக்கு மாதவரம் செயராசு அவர்கள் இல்லத்தில் மேற்படி பிரச்சார செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

திரு. வி. க. நினைவுப் போட்டி

சென்னை மாணவர் மன்றச் சார்பில் திரு. வி. க. அவர்கள் நினைவாகக் கல்லூரி வகுப்பு மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி 26—2—56 பிற்பகல் 3 மணிக்கு மேல் சென்னை டாக்டர் குருசாமி முதலியார் டி. டி. வி. உயர்நிலைப் பள்ளியில் நடைபெறும்.

கோவில்பட்டியில் பொது வேலைநிறுத்தம் வெற்றி

ஆலைகள், தீப்பெட்டி தொழிற்சாலைகள் திறக்கப்படவில்லை

நகரில் முழு அர்த்தால் நடைபெற்றது; இலட்சுமி மில் நிர்வாகிகள் விடுமுறை அளித்தனர்; மற்றொரு நூற்பு ஆலையான லாயல் மில்லுக்கு ஏற்கனவே அன்று விடுமுறை தினம்; நகரெங்குமுள்ள எவரெஸ்ட், மீனாட்சி, ஜெபப்பிரகாஷ், காதரியா, ஈஸ்ட் இந்தியா, காமரின் மேட்ச் இண்டஸ்டிரீஸ், சிவன் ஆகிய எல்லாத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கும், பெருவாரியான பள்ளிக்கூடங்களுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது.

காங்கிரஸ் தியாகிகள் எம். சண்முகம்(பிள்ளை), காந்தி (செட்டியார்) ஆகிய இருவர் கடை தவிர நகரெங்குமுள்ள எல்லாக் கடைகளும் மூடப்பட்டிருந்தன. அவர்கள் இருவரும்கூட பகலுக்கு மேல் கடைகளை மூடிவிட்டனர். எல்லா லாரி உரிமையாளர்களும் தமது லாரிகளை ஓடாமல் நிறுத்திக் கொண்டனர். 20-ந் தேதி காலை 8 மணிக்கு இலட்சுமி மில் முன்பாக இருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு மெயின்ரோடுகள் வழியாக நகரைச் சுற்றி காந்தி மைதானம் வந்தடைந்து பிப். 20—உறுதிமொழி எடுக்கப்பட்ட பின்னர் 12 மணிக்கு அமைதியாகக் கலைந்தது; ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கில் தோழர்கள் அணிவகுத்து வந்தனர்.

ஆரணி (வ. ஆ.) பஸ் நிலையத்தில் அமைதியான தோற்றம்

பஸ் நிலையம் மயான அமைதியாகக் காட்சி தந்தது. காந்தியார் இறந்தபோதும் மூடப்படாத அருணகிரி சத்திரத்திலுள்ள கடைகள், கொசப்பாளையம் சின்ன கடைத் தெருவிலுள்ள கடைக்காரர்கள், மார்க்கெட் ரோடில் பழக் கடைகள், பூக்கடைகள், அரிசி கடைகள் (கூடையில் வைத்து விற்பவர்கள்), எல்லா தேநீர் விடுதிகளும், காய், கறிக் கடை வியாபாரிகள் அனைவரும் பூரண கடையடைப்புச் செய்தனர் நகரில் ஒரு மாட்டு வண்டி கூட ஓடவில்லை. எந்தப் பகுதியிலும் ஒரு கடையும் திறக்கப்படாத காரணத்தால் அமைதியான நிலைமை, நகர் முழுமையும் பரவி இருந்தது. இரு சினிமாக்களிலும் படக் காட்சி நடத்தப்படவில்லை. தனலட்சுமி ஆயில் மில், மற்றும் ஆரணியில் முக்கிய வியாபாரமான பட்டுத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் அனைவரும் அன்று வேலைக்குச் செல்லவில்லை. பட்டுப் புடவைக் கடைகள் அனைத்தும் மூடிக் கிடந்தன. சர்க்கார் பணிமனைகளில் வழக்கம்போல் அலுவல்கள் நடைபெற்றன போர்டு உயர்நிலைப் பள்ளி, டவுன் உயர்நிலைப் பள்ளி இரண்டிலும் 15 சத விகித மாணவர்கள் பள்ளியிலிருந்தனர்.

மாலை 4 மணிக்கு சீனிவாச முதலியார் சத்திரத்திலிருந்து மிகப் பெரிய ஊர்வலம் புறப்பட்டு, முக்கிய வீதிகளின் வழியே வந்து கொசப்பாளையம் தர்மராசா கோவில் மைதானத்தில் சர்வ கட்சி கூட்டணியினரின் உறுதி மொழியை படித்த பின் கலைந்தது.

குடந்தை ஊர்வலத்தில் கே.கே.நீலமேகம், டி.கே.சண்முகம்

பிப். 20—மேல் விவரங்கள்

தோழர் கே. கே. நீலமேகம் (தி.மு.க.), நடிகர்கள் டி. கே. சண்முகம், டி. கே பகவதி, தோழர் எஸ். டி. பாலு (தமிழரசுக் கழகம்) ஆகியோர் முன்னின்று நடத்திய பிரம்மாண்டமான ஊர்வலம், குடந்தை நகர் கண்டிராததாயிருந்தது.

பிப். 20-ந் தேதியன்று நடைபெற்ற அர்த்தால் விவரங்கள் குறித்து ஏற்கனவே தகவல் தந்திருந்தோம்.

நகரில் நாடகம் நடத்திவரும் டி. கே. எஸ். சகோதரர்கள், பிப் 20-ல் நாடகம் நடத்தாது, குழுவினருடன் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகளைச்சுற்றி பின் மேலக்காவிரியை அடைந்தது. ஊர்வலத்தில் கூடியிருந்த பல்லாயிரம் மக்களும், டி. கே. சண்முகம் படித்த உறுதி மொழிகளை ஆர்வத்தோடு மேற்கொண்டனர்; பின்னர் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

அர்த்தால் அமைதியாக நடைபெற உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

மாநிலங்கள் சபை உறுப்பினர் கைது

பம்பாய், பிப். 22—

மொழிவழி மாநில சம்பந்தமாக பம்பாயில் நடைபெற்ற கலகத்தை ஒட்டி மாநிலங்கள் சபை உறுப்பினர் ராஜாராம் பாலகிருஷ்ண ராவ் (குடியானவர்—தொழிலாளர் கட்சி) கைது செய்யப்பட்டார். சென்ற ஒரு மாதமாக அவர் தேடப்பட்டு வந்தார். அவருடன் ஒரு மராத்தியப் பத்திரிகை ஆசிரியரும் கைது செய்யப்பட்டார்.

தஞ்சை தரும் வெற்றிச் செய்தி

ஒற்றை மாட்டு வண்டிகளும் நகரவில்லை

தஞ்சையில் இதுவரை வரலாறு கண்டிராத அளவு சிறப்பாக பூரண பொது வேலைநிறுத்தம் நடைபெற்றிருக்கிறது.

எல்லாக் கடைகளும் அடைபட்டுக்கிடந்தன. அதோடு (வாடகை வண்டிகள்) ஒற்றை மாட்டுவண்டிகள் கட்டுப்பாடாக பொது வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

கூட்டணியினரின் பெருமுயற்சி சிறந்த வெற்றி பெற்றிருக்கிறது

மாலை 3½ மணிக்கு, கரந்தை ஆஸ்பத்திரியிலிருந்து சர்வகட்சி செயற்குழுவினரடங்கிய ஓர் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு திலகர் திடலில் போய் அடைந்தது. அங்கு உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டது.

பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு அவசியமே இல்லாதவகையில் அர்த்தால், வெகு அமைதியாக நடைபெற்றது என்பது மிகவும் போற்றத்தக்கது.

வடநாட்டில் 3-வது இரும்பு ஆலை

சர்க்காரின் தீவிர ஏற்பாடு

புதுடில்லி, பிப். 25—

துர்காபூரில், மூன்றாவது எஃகுத் தொழிற்சாலையை அமைப்பது சம்பந்தமாக, இந்திய எஃகுத் தொழிற்சாலை நிர்மாண நிறுவனத்திடமிருந்து பூர்வாங்க மதிப்பீடுகள் கிடைத்துள்ளன என்றும், அவை தற்போது இந்திய சர்க்கார் பரிசீலனையில் இருந்து வருகிறது என்றும், மத்திய இரும்பு—எஃகு உற்பத்தி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, மக்கள் சபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இதற்கிடையில் சில 'ஆரம்ப' நடவடிக்கைகள், இடம் பரிசீலனை ஆகிய வேலைகள் நடைபெற்று வருகின்றன என்றும், தொழிற்சாலைத் திட்டத்துக்கு எவ்வகையில் நிதி உதவி அளித்து வருவது என்பதுபற்றி இன்னும் ஆராயப்பட்டு வருகிறது என்றும் மந்திரி தெரிவித்தார்.

'வாக்கெடுப்பை நினைப்பவர் முட்டாள் சுவர்க்கத்திலிருப்பவரே'

'வாக்கெடுப்பு ஒரு கற்பனை'

காஷ்மீர் நிலை பற்றி பக்ஷி குலாம்

சிநகர், பிப். 23—

"காஷ்மீர் குறித்து பொதுஜன வாக்கெடுப்பை நினைத்துக் கொண்டிருப்பவர்கள், முட்டாள் சுவர்க்கத்தில் வசிப்பவர்களாகவே இருக்கவேண்டும்."

"காஷ்மீர் மக்கள் இந்தியாவுடன் இருக்கிறார்கள்; இந்தியாவுடனேயே இருப்பார்கள்"

—இவ்வாறு காஷ்மீர் முதலமைச்சர் பக்ஷி குலாம் குறிப்பிட்டுள்ளார்.

"காஷ்மீர்—ஜம்மு மக்கள் அபிவிருத்தி அறிவு படைத்திருப்பவர்களாக மாறி இருக்கிறார்கள்; கற்பனைப் பிரச்சினையான வாக்கெடுப்புப் போன்றவைகளில் அவர்கள் சிறிய அளவிலும் கருத்துச் செலுத்துவதில்லை" என்றும் அவர் கூறியுள்ளார்.

நகர சுத்தித் தொழிலாளர்கள் கூட வேலைக்குச் செல்லவில்லை

தூத்துக்குடியில் பிப். 20 மாபெரும் வெற்றி

வேறெல்லா நகரங்களையும் போலவே தூத்துக்குடியிலும் பிப். 20 பொதுவேலை நிறுத்தம் வெகு அமைதியாக நடைபெற்று வெற்றி பெற்றுள்ளது.

நகர சுத்தித் தொழிலாளர்கள், உப்பளத் தொழிலாளர்கள், கை வண்டி, குதிரை வண்டித் தொழிலாளர்கள், ஆலைத் தொழிலாளர்கள் எல்லாம் பொதுவேலை நிறுத்தத்தில் பங்குகொண்டு நகரில் அமைதி தவழச் செய்திருக்கின்றனர்.

கடைகள் திறக்கப்படவில்லை; சினிமா கொட்டகைகளில் காட்சிகள் நடைபெறவில்லை.

நகருக்குள் பஸ், சைக்கிள், ரிக்ஷா, குதிரை வண்டி, மாட்டு வண்டி முதலியன எதுவும் நடமாடவில்லை; யாவும் முடங்கிக் கிடந்தன.

அர்த்தால் வேண்டாமென காங்கிரசார் விடுத்த வேண்டுகோள்—மிரட்டல் எல்லாம் பலிக்காது போய்விட்டது.

எந்தவித அசம்பாவிதமும் இன்றி பரிபூரண அர்த்தால் அமைதியாக நடைபெற்றிருக்கிறது.

பள்ளிகள், கல்லூரி மாணவர்கள் எல்லாம் கட்டுப்பாடாக வகுப்புகளுக்குச் செல்லாது பொது வேலை நிறுத்தத்தில் பங்கு பெற்றிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.